REPORTING SECTION

புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளில் யானைக்கால் வியாதி.

*வினா எண். 575—திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைசசர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) குமரி மாவட்டம் புதுக்கடை நகரப் பஞ்சாயத்து பகுதிகளில் யானைக்கால் வியாதி பரவி வருவது அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அந்நோய் பரவாமல் தடுக்க அரசு என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது ?

(இ) குமரி மாவட்டத்தில் வேறெந்தப் பகுதிகளெல்லாம் அந்நோயால் பாதிக்கப்பட்டு உள்ளன ;

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) புதுக்கடை நகரப் பஞ்சாயத்துப் பகுதி யானைக் கால் நோய் பரவ வாய்ப்புள்ள பகுதியாகும்.

(ஆ) விளவங்கோடு வட்டம், புதுக்கடை பேரூராட்சிப் பகுதியில் ஆண்டொன்றுக்கு ரூ. 3,800 செலவில் யானைக்கால் நோய் தடுப்புத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு 1977-ம் ஆண்டு அனுமதி வழங்கியுள்ளது.

(இ) குமரி மாவட்டத்தில், நாகர்கோவில், பத்மநாபபுரம், இரணியல், திருவிதாங்கோடு ஆகிய பகுதிகளில் இந்நோயைத் தடுக்க சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறைகள் தடுப்பு நட வடிக்கைகளை அமல் செய்து வருகின்றன. இவற்றைத் தவிர, தக்கலை, குறுத்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்திலும் அதனைச் சார்ந்த மண்டைக்காடு, கள்ளுக்கோட்டம், தலக்குளம், மண்டே மார்க்கட் போன்ற பகுதிகளில் முதுநிலை பூச்சியல் அறிஞரால் ஆய்வு செய்யப்பட்டு இந்நோய் அப்பகுதிகளில் பரவி இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தேவையான செயற் குறிப்புகள் தீட்டி, அதற்கு உள்ளாட்சி மன்றங்களின் ஒப்புதலும் ஊரக வளர்ச்சி இயக்குநரின் ஒப்புதலும் பெற பொது சுகாதாரம், தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் தக்க நடவடிக்கை எடுத்துள் ளார்.

[முற்பகல் 10–00]

திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்ட பதிலிலேயிருந்து புதுக்கடை பேரூராட்சியில் ஏறக்குறைய 3,000 ரூபாய் அளவற்கு அந்த யானைக்கால் வியாதியைக் தடுப்பதற்காக அனுமதித்துள்ளார்கள்

என்று தெரிகிறது. இந்தப் பணம் மிகவும் குறைவானதாகும். அந்தப் பகுதியிலுள்ள சிறுவர், சிறுமியர் மற்றும் வயோதிகர்கள் இந்த வியாதியால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, இந்தப் பணத்தை அதிகப்படுத்த வேண்டும். அது மட்டுமல்ல, அதிகமான பகுதிகளில்—இரணியல் போன்ற பகுதிகளில்—இந்த நோய் பரவிக் கொண்டே வருவதால், குமரி மாவட்டத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து இந்த நோயை அறவே போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல—ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லை என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள்—போதுமானதாக இல்லை என்பதுஅங்கிருக்கின்ற மருத்துவநலத் துறையால்பரிசீலிக்கப்பட்டு அறிவிக்கப்படுமேயானால் தேவையான அளவற்கு விஸ்தரிக்கப்படும். இந்த நோய் அறவே தடுக்கப்பட வேண்டுமென்ற நடவடிக்கைகளில் மத்திய அரசும், இந்த அரசும் ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை இன்னும் இரண்டு நிமிடங்களுக்கு நீட்டிக்கிறேன்.

திரு. ஆ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, இந்த யானைக் கால் நோயைத் தடுப்பதற்காக அரசு என்னென்ன வகைகளிலே நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது? கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல் எனது தொகுதியில் இரணியல், திருவிதாங்கோடு, தக்கலை, பத்மநாபபுரம் போன்ற பகுதிகளில் இந்நோய் இருக்கிறது. அங்கு நல்ல குடிநீர் வசதி இல்லை. இந்த நோயைத் தடுப்பதற்காகப் பாதுகாக்கப்பட்ட குடிநீரைக் கொடுப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த நோய் 'கியூலெக்ஸ்' என்ற கொசுவால் உண்டாகிறது. இந்தக் கொசுவைத் தடுக்க வேண்டுமென்பதற்காகத்தான் பல்வேறு விதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், இந்த நோயை அறவே ஒழிப்பதற்குச் சரியான வழிமுறைகள் இதுவரையில் கண்டறியப்படவில்லை. ஆகவே, இப்பொழுது நகரங்களிலும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலும் மட்டும் செயல்படுகின்ற தடுப்பு நடவடிக்கைகளை கிராமப் பகுதிகளிலும் செயல்படுத்துவதற்கு மத்திய அரசால் விரிவாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

1979 மார்ச் 30]

பாதுகாக்கப்பட்ட குடிநீரைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் எல்லாப் பகுதிகளிலும் தரப்பட வேண்டுமென்ற ஒரு பிரச்சினையை இந்த நாட்டிலே முதன்முதலாக உருவாக்கி வைத்தார்கள். இன்றைக்கு அந்த எண்ணத்திலேதான் இந்த அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இதுபற்றி விரிவாக கேள்வியை மாண்புமிகு குடிநீர் வடிகால் வாரிய அமைச்சரவர்களிடத்திலே கேட்டார்களானால் விரிவான பதில் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. மற்றக் கேள்விகள் நாளைக்குத் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறாதது என்பதைக் குறிக்கும்.]

(2) உரிமைப் பிரச்சினைகள்.

(அ) கிராமத் தொழில்கள் அமைச்சர் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேரவையின் 184-வது விதியின் கீழ், உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சினையைப் பேரவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். இது சம்பந்தமாக நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். (குறுக்கீடு.) இது வேறா, சரி.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் மதுவிலக்குச் சட்டத்தை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, மதுவிலக்குத் திருத்தச் சட்டத்தின் மீது நடந்த விவாதத்தில் நானும், இந்த அவையிலே உள்ள வேறு ஒரு சில முஸ்லீம் உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். நான் பேசும்பொழுது, மதுவிலக்குச் சட்டத்தை, ஒரு ஜீவாதாரமான கொள்கையை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் நாம், மதுவிலக்குச் சட்டம் நாட்டுக்குத் தேவையான ஒரு சீர்திருத்தச் சட்டமாக மட்டுமல்லாமல், அதை நாங்கள் முஸ்லீம்கள் என்ற